செய்தி வெளியீடு எண்.16 நாள்.07.01.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததை தொடர்ந்து வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நெற்பயிர்களை பயிரிடப்பட்ட பகுதிகளை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் ஆகியோர் தொடர்ந்து இரண்டாவது நாளாக நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததை தொடர்ந்து வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நெற்பயிர்களை பயிரிடப் பகுதிகளை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் ஆகியோர் தொடர்ந்து இரண்டாவது நாளாக இன்று (07.01.2017) நேரில் பார்வையிட்டு களநிலை உண்மை அறியும் ஆய்வு மேற்கெண்டனர்.

வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் வெள்ளானூர், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் கூடப்பாக்கம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் முதுகூர் ஆகிய பகுதிகளை நேரடியாக பார்வையிட்டு விவசாயிகளை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது திருவள்ளூர் மாவட்டத்தில் 58 சதவீதம் மழை குறைவாக பொய்துள்ளது. 6115 ஹக்டேர் நெற்பயிர் நிலங்கள் போதிய நீர் ஆதாரம் கிடைக்கப்பெறாமல் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு 500 கோடி நிதி ஒதிக்கீடு செய்து அனைத்து விதமான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கனவே வார்தா புயல் மாவட்டத்தில் 49 கோடி நிவாரணம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அனைத்து தரப்பு விவசாயிகளையும் நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை அறிந்து வருகிறோம் களநிலை உண்மை அறியும் பணிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு அறிக்கை வழங்கப்படும் என்று கூறினார்.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரிவின்படி மாவட்டத்தில் 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் வறட்சி பாதிப்பினை களநிலை உண்மை அறியும் பணிகள் நடைபெற்று வருகிறது. 2 அமைச்சர்கள், கண்காணிப்பு அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வறட்சி பாதித்த இடங்களில் 10 சதவிதம் களநிலை உண்மை அறியும் ஆய்வு மேற்கொண்டு அறிக்கையாக சமர்பிக்கப்படும். துரிதமாக நிவாரண உதவிகளை மத்திய அரசிடமிருந்து பெறுவதர்காக தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருகிறது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கண்காணிப்பு அலுவலர்/முதன்மை செயலர் பொது பணித்துறை திரு.எஸ்.கே.பிரபாகர்,இ.ஆ.ப.,அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப.,அவர்கள், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பி.வேணுகோபால், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), திரு.டி.ஏ.ஏழுமலை (பூவிருந்தவல்லி) மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~